


# இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின்

# வெற்றிடங்கள்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஆதிக்கவரம்பின் கீழ் இலங்கையில் அமைந்துள்ள ஒரே ஒரு ஏற்றுமதி கடன் காப்புறுதி முகவர் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனமாகும். இலங்கையின் ஏற்றுமதியாளர்கள், வங்கிகள் மற்றும் நிதிசார் நிறுவனங்களுக்கு கடன் முகாமைத்துவ தீர்வு ஆகியவற்றின் மூலமாக தகவல், ஆதரவு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை வழங்கும் வர்த்தகத்தில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

நாம் தொடர்ந்து வளர்வதுடன் முன்னேறிச் செல்லும் பாதையில் இருப்பதால் திடமான வெளியேறிச் செல்லும் பலமான ஆளிடையேயான திறன்களையுடைய தனிநபர்களை எமது புகழ்வாய்ந்த அமைப்பின் பங்குதாரராக செயற்படுவதற்கு அழைக்கின்றோம்.

## 01. பொது முகாமையாளர்– HM 2-2 - 01 வெற்றிடம்

**பணி விபரம்:**

கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாட்டு அதிகாரியாக (COO), பொது முகாமையாளர் பணிப்பாளர் சபையில் மூலோபாய ஆலோசனைகளை செயற்படுத்தும்போது, நிறுவனத்தின் இலக்கை அடைவதற்காக குழுக்களை செயற்படுத்துதல்.

**கல்வித் தகைமைகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பொருளியல், புள்ளிவிபரவியல் அல்லது கணிதம், வியாபார நிர்வாகம், வர்த்தகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய இயைபுடைய துறையில் பட்டம்

   அத்துடன்

   பொருளியல், புள்ளிவிபரவியல் அல்லது கணிதம், வியாபார நிர்வாகம், வர்த்தகம் அல்லது இயைபுடைய துறையில் பெற்ற பட்டப்பின்படிப்பு பட்டம் (முதுமாணிப் பட்டம்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் அங்கத்துவம்.

   மற்றும்

   முதலாவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது தனியார் நிறுவனமொன்றில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவுடன் ''முகாமைத்துவ மட்டத்தில்'' ஆகக் குறைந்தது 18 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் என்பதுடன் அதில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 05 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

2. பொருளியல், புள்ளிவிபரவியல் அல்லது கணிதம், வியாபார நிர்வாகம், வர்த்தகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய இயைபுடைய துறையில் பட்டம்

   மற்றும்

   எந்தவொரு இயைபுடைய துறையிலும் கலாநிதிப் பட்டம்

   மற்றும்

   கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவுடன் "முகாமைத்துவ மட்டத்தில்", ஆகக் குறைந்தது 05 வருட அனுபவம்.

**வயது :** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு :** HM 2-2 – 2025 ரூபா [163,620 - 12x4,850- 221,820] + தொழில்சார் கொடுப்பனவு, தொடர்பாடல் கொடுப்பனவு, மிகுதியான விடுமுறைகளுக்கான வருடாந்தக் கொடுப்பனவு, மருத்துவ பிரதிபலன்கள் உட்பட அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் (சாரதி சகிதம் கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்படும் வாகனம்)

01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆரம்பத்தில் 142,410.00 ரூபா சம்பள அளவில் அமர்த்தப்படுவர்.

## 02. உதவிப் பொது முகாமையாளர் - செயற்பாடுகள் (ஏற்றுமதி கடன் காப்புறுதி) – HM 1-1 - 01 வெற்றிடம்

**பணி விபரம்:**

- சகல கடன் காப்புறுதி உறுதிகள் மற்றும் வங்கிப் பிணை முறி வழங்குதல் தொடர்பான அனைத்து செயல்பாட்டு அம்சங்களை ஒட்டுமொத்தமாக மேற்பார்வை செய்தல்.
- கடன் காப்புறுதி உறுதிகள், வங்கிப் பிணை முறிகள் மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கான உத்தரவாதம் மற்றும் கடன் எல்லைகளை விதித்தல்
- பணிப்பாளர் சபை, தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர், பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (செயற்பாடுகள்) என்பவர்களுக்கு வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கான கடன் எல்லைகள் மற்றும் கடன் காப்புறுதி உறுதி மற்றும் வங்கிப் பிணை முறிகளுக்கு உத்தரவாத எல்லை தொடர்பாக அறிக்கையிடல்.
- பணிப்பாளர் சபை மற்றும் உயர் முகாமைத்துவத்திற்குத் தேவைப்படுத்தப்படும் அறிக்கைகளை உரிய காலத்தில் பிழையின்றி வழங்குதல்
- ஏனைய பிரிவுகளுடன் ஒன்றிணைந்து செயலாற்றி செயற்பாட்டுப் பிரிவின் வேலைகளின் பயன்பாடு மற்றும் வினைத்திறனை மேம்படுத்துதல்
- கடன் காப்புறுதி உறுதி மற்றும் வங்கிப் பிணை முறிகளுக்கான உள்ளக செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளல்
- செயற்பாட்டுப் பிரிவின் உள்ளக சிக்கல்களை பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளருடன் (செயற்பாடுகள்) தீர்த்துக்கொள்ளல்
- கடன் காப்புறுதி உறுதி மற்றும் வங்கிப் பிணை முறிகளுக்கான செயற்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர், பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர்களினால் (செயற்பாடுகள்) வழங்கப்படும் கட்டளைகளை செயற்படுத்துதல்

**கல்வித் தகைமைகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதாரம், புள்ளிவிபரம் அல்லது கணிதம், வியாபார நிர்வாகம், கணக்கியல், வர்த்தகம், சட்டம் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் இளமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   அத்துடன்

   பதவியின் பாடப்பரப்பிற்கு உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின்படிப்புப் பட்டம் (முதுமாணிப் பட்டம்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவகத்தின் இணை அங்கத்துவம்.

   மற்றும்

   கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை / நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' ஆகக் குறைந்தது 13 வருட அனுபவம்.

2. பதவிக்கு உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்.

   அத்துடன்

   கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை / நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' ஆகக் குறைந்தது 13 வருட அனுபவம்.

**வயது :** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு:** HM 1-1 – 2025 ரூபா [140,640 - 15 x 4,100 – 202,140] + தொழில்சார் கொடுப்பனவு, தொடர்பாடல் கொடுப்பனவு, மிகுதியான விடுமுறைகளுக்கான வருடாந்தக் கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு, மருத்துவ பிரதிபலன்கள் உட்பட அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்

01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆரம்பத்தில் 123,019.00 ரூபா சம்பள அளவில் அமர்த்தப்படுவர்.

## 03. சாரதி – PL3 - 02 வெற்றிடங்கள் (ஒப்பந்த அடிப்படையில்)

**கல்வித் தகைமைகள்:**

அதிகபட்சமாக இரண்டு அமர்வுகளில் இரண்டு (02) திறமைச் சித்திகள் சகிதம் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட கனரக வாகனத்திற்கான சாரதி உரிமத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் சாரதியாக குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**வயது :** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு:** PL 3 – 2025 ரூபா [43,280 – 10 x 490 - 10 x 540 - 10 x 590 – 12 x 630 – 67,040] + மிகுதியான விடுமுறைகளுக்கான வருடாந்தக் கொடுப்பனவு, மருத்துவ பிரதிபலன்கள் உட்பட அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்

01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆரம்பத்தில் 40,834.00 ரூபா சம்பள அளவில் அமர்த்தப்படுவர்.

**பொதுவான நிபந்தனைகள்:**

சகல விண்ணப்பதாரிகளும்,

- இலங்கை பிரஜையொருவராகவிருத்தல் வேண்டும்
- பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கான உடல், உள ரீதியான தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- மிகச்சிறந்த குணவியல்புகளைக் கொண்டிருத்தல்

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனங்களின் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

மேற்கூறிய பதவிகளுக்கான விண்ணப்பங்களை இயைபுடைய சான்றிதழ்களின் புகைப்படப்பிரதிகள் மற்றும் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் (non-related referees) தகவல்கள் சகிதம் பதிவுத் தபாலில் 2026 ஜனவரி 19ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் 'தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர், இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம், 4ஆம் மட்டம், NDB-EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு-02' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.


SLECIC
Information, Support & Protection

Chairman & Managing Director
Sri Lanka Export Credit Insurance Corporation
Level 4, NDB - EDB Tower,
No 42,Nawam Mawatha,
Colombo 02.

Telephone : 011 2307519
Fax : 011 2307515
Web : www.slecic.lk